O.S.71/2019
PW1 –ரத்தினவேல் பாண்டியன்
நாள் 20.02.2026, 02.00 P.M.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** வாதி வழக்கை தாக்கல் செய்து 9 வருடங்கள் கழித்து எனது பெயரில் பவர் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வாதி ஊரில் நலமுடன்தான் உள்ளார் என்றால் அவர் வெளியூரில் உள்ளார். வாதி என்ன வழக்கு மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண் 121 ஆகும். வழக்கு சொத்தின் நான்கு மால்கள் தெரியும். வழக்கு சொத்தின் தெற்கே 2ம் பிரதிவாதி சர்வே எண் 121/11 உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் தெற்கே உள்ள சர்வே எண் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு தெற்கே 2ம் பிரதிவாதி கட்டுமானம் எதுவும் கட்ட கூடாது என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு தெற்கே 2ம் பிரதிவாதி கட்டுமானம் கட்டியுள்ள சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்திற்கு தெற்கே உள்ள சொத்தை சின்னராமையாவிடம் இருந்து முத்துஇருளாயியம்மாள் 23.04.1986 ஆம் தேதி கிரையம் வாங்கினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முத்துஇருளாயியம்மாளிடம் இருந்து 2ம் பிரதிவாதி 22.07.2002ம் தேதி பதிவு கிரைய ஆவணம் மூலமாக கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. 2002ம் ஆண்டு முன்னரே முத்துஇருளாயியம்மாள் இறந்து விட்டார். முத்துஇருளாயியம்மாள் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் அது என்னிடம் இல்லை. 2002ம் ஆண்டு முத்துஇருளாயியம்மாள் உயிருடன் இருந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. வழக்கு சொத்து 2 சர்வே எண்களில் உள்ளடக்கியது என்றால் சரியல்ல. ஒரு சர்வே எண்ணில் உள்ளடக்கியது. தாவா சொத்தானது ஆதியில் இருந்து இப்போது வரை காலி மனையாக உள்ளது என்றால் சரியல்ல. 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் அதில் வீடு இருந்தது. வழக்கு சொத்தில் ஒரு போதும் வீடு இருந்தது இல்லை என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கருணாநிதி குடியிருக்கும் வீட்டின் கதவு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்திற்கு 1ம் பிரதிவாதி

பெயரிலும் அவர்களுடைய சகோதரி லட்சுமி என்பவர் பெயரிலும் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. வாதி என்னுடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். வழக்கு சொத்து தாய் வழியில் பூர்வீக பாத்தியம் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதாவது வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். என்னுடைய தாயார் சொத்துக்களை தற்போது வரை பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் வாதியை தவிர பத்திரகாளி, அஞ்சுகம், கண்ணகி ஆகியோர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் பெயரில் உள்ள வீட்டின் வரி ரசீதைத்தான் வா.சா.ஆ.2 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பட்டா ஏற்படுவதற்கு முன்பே 1ம் பிரதிவாதி பெயரிலும், லட்சுமி என்பவர் பெயரிலும் தாவா சொத்திற்குரிய பட்டா ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 பட்டா வருவாய் ஆவணங்களில் பதிவேற்றம் செய்யப்படவில்லை என்றாலும் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணமானது கீழமை மற்றும் மேல் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது.

5. எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் இடையே குற்ற வழக்கு நீதிமன்றத்தில் நடந்து முடிவடைந்து விட்டது என்றால் சரிதான். சுப்பிரமணி என்பவர் எங்கள் ஊரில் பஞ்சாயத்து தலைவர் என்றால் சரிதான். அவரை எதிர்த்து ஆண்டி என்பவர் போட்டியிட்டார் என்றால் சரிதான். நான் தேர்ததில் சுப்பிரமணிக்கு சார்பாக வேலை பார்த்தேன் என்றாலும் 2ம் பிரதிவாதியும் அவரது சகோதரர் வேலும் ஆண்டிக்கு சார்பாக தேர்தலில் வேலை செய்தார்கள் என்பதால் எங்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டு குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பகையை மனதில் வைத்துக்கொண்டு நான் எனது சகோதரரை தூண்டி விட்டதன் பேரில் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த காரணத்தின் பேரில்தான் எனது சகோதரர் சாட்சியம் அளிக்காமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.4 ஆவணத்தை பஞ்சாயத்து தலைவர் சுப்பிரமணியிடம் இருந்து எனது அண்ணன் வாங்கினார் என்றால் சரிதான். நான் அவருக்கு ஆதரவாக செயல்பட்டதால்தான் அந்த ஆவணத்தை சுப்பிரமணியன் கொடுத்துள்ளார் என்றால்

சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தை வழங்கியவரை நீதிமன்றத்தில் விசாரிக்காதவரை அந்த ஆவணத்திற்கு சாட்சிய மதிப்பு இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்டவாறு தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல.

7. வழக்கு சொத்திற்கு வடக்கே சர்வே எண் 121/8 பேச்சியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண் 121/8 சொத்திற்கு வடக்கேதான் எனக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது உடன் பிறந்த சதோதரிகளை சேர்க்காதவரை அவசியமான கட்சிக்காரர்களை சேர்க்காத தோசத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி லட்சுமி சேர்க்காதவரை அவசியமான கட்சிக்காரர்களை சேர்க்காத தோசத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வேலுச்சாமி இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எனக்கோ எனது முன்னோர்களுக்கோ எனது சகோதர்களுக்கோ எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு 2ம் பிரதிவாதி வேலுச்சாமிக்கு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல.

8. இந்த வழக்கு 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சின்னசாமிக்கு பூர்விக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து காலி மனை என்பதால் நேரடி பட்டா கொடுக்காமல் 1ம் பிரதிவாதி லட்சுமிக்கு அசைமெண்ட் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வேலுச்சாமி தாவா சொத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. பிராதில் எனது சகோதரர் 2ம் பிரதிவாதி கட்டுமானம் கட்டகூடாது என்று கேட்டுள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எனக்கோ, எனது சகோதரர்களுக்கோ எந்த பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதவை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி